இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 298– திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 25 – வியாழக்கிழமை 08 ஜூன் 2023 – மதுரை 10 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:81 - Issue 298:Thiruvalluvar Year - 2054 - Vaikasi 25 - Thursday 08 June 2023 - Madurai 10 Pages ₹5.00

## தமிழ்நாட்டின் வளர்ச்சி-மாநிலத்தில் மிகப்பெரிய பொறுப்பில் இருப்பவருக்கு மட்டும் புலப்படவில்லை!

# ‘அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம்’ இந்தியாவுக்கே முன்னோடியாக அமையும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின்- 500 நகர்ப்புற நல வாழ்வு மையங்களைத் திறந்து வைத்து பெருமித உரை!

**சென்னை, ஜூன் 8 -**

**சென்னை, தேனாம்பேட்டை, விஜயராகவா சாலையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் நடைபெற்ற விழாவில் முதற்கட்டமாக 125 கோடி ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ள 500 நகர்ப்புற நலவாழ்வு மையங் களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் தமிழ்நாட்டின் வளர்ச்சி மாநிலத்தில் மிகப் பெரிய பொறுப்பில் இருப் பவருக்கு மட்டும் புலப்படவில்லை; அனைவ ருக்கும் நலவாழ்வுத் திட்டம் இந்தியாவுக்கே முன்னோடியாக அமையும் என்று பெருமிதத் துடன் குறிப்பிட்டார்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.6.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் சென்னை, தேனாம்பேட்டை, விஜயராகவா சாலையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் நடைபெற்ற விழாவில் முதற்கட்டமாக தலா 25 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 125 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மரு. கலாநிதி வீராசாமி, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ். பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.6.2023) மருத்து வம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை யின் சார்பில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை வருமாறு: -

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

வரவேற்புரை என்கிற பெயரில் இந்த துறையினுடைய அமைச்சர் மா.சுப்பிர மணியன் அவர்கள் ஒரு சிறப்புரையை ஆற்றியிருக்கிறார். அவர் பேசியதற்கு பிறகு வேறு எதுவும் பேசுவதற்கு இல்லை. அவ் வளவு தெளிவாக, அழுத்தம் திருத்த மாக இந்த அரசின் சார்பில், குறிப்பாக மருத்துவத் துறையின் சார்பில் ஆற்றி கொண்டிருக்கக்கூடிய, ஆற்ற யிருக்கின்ற பல்வேறு பணிகளை, சாதனை களை எல்லாம் இங்கே உங்களிடத்திலே எடுத்து கூறியிருக்கிறார்.

நம்முடைய ஆட்சியை பொறுத்தவரை, குறிப்பாக திராவிட மாடல் ஆட்சியை பொறுத்தவரைக்கும், கல்வி மருத்துவம் ஆகிய இரண்டையும் திராவிட மாடல் அரசு இரண்டு கண்களாக நினைத்துப் போற்றி வருகிறோம் செயல்படுத்தி வருகிறோம்.

**தமிழ்நாட்டில் மிகப் பெரிய பொறுப்பில் இருப்பவருக்கு மட்டும் குழப்பம் ஏன்?**

கல்வியில் சிறந்த தமிழ்நாடாகவும் மக் கள் நலம் பேணுவதில் மிகச் சிறந்த தமிழ் நாடாகவும் நம்முடைய மாநிலம் இன்றைக்கு தலை நிமிர்ந்து நிற்கிறது. ஆனால் இப்படி தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சி, மாநிலத்திலே மிக பெரிய பொறுப்பில் இருக்கக்கூடிய ஒருவ ருக்கு மட்டும் அது புலப்படவில்லை. அவர் திராவிட மாடல் ஆட்சியை ஏற்றுக்கொள் ளாத நிலையில் அந்த கருத்துக்களை எல் லாம் விமர்சனங்களாக்கி தொடர்ந்து தினந்தோறும் ஏதாவது ஒரு செய்தியை மக்களை குழப்பக்கூடிய வகையிலே அவர் செய்து கொண்டிருக்கிறார். அதை பற்றி யெல்லாம் மக்கள் கொஞ்சம்கூட கவலைப் பட மாட்டார்கள். அதையெல்லாம் மக்கள் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை அவர் தொடர்ந்து அப்படி சொல்லிக் கொண்டே இருக்க வேண் டும். அப்போது தான் நமக்கு ஒரு எழுச்சி ஏற்படும். மக்களும் தெளிவாக புரிந்து கொள்வார்கள்.

## கல்வி - மருத்துவத்தை இரு கண்களாக போற்றி வரும் திராவிட மாடல் அரசு!

நம்மை ஆளாக்கிய நம்முடைய ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலை ஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா ஜூன் 3ஆம் தேதியிலிருந்து நாம் கொண் டாட தொடங்கியிருக்கிறோம். இந்த ஆண்டு முழுவதும் கொண்டாடுவதற்காக திட்ட மிட்டு, நம்முடைய அரசின் சார்பிலே ஏனென்றால் இந்த அரசே அவருடைய அரசு, ஐந்து முறை தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலிருந்து தமிழ்நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை செய்து காட்டி யிருக்கக்கூடியவர். அதிலும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்காக

- கண்ணொளி காப்போம் திட்டம்,
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்,
- வருமுன் காப்போம் திட்டம்,
- கலைஞர் காப்பீட்டுத் திட்டம்,

108 இலவச ஆம்புலன்ஸ் திட்டம் போன்ற எண்ணற்ற சுகாதாரத் திட்டங்கள் நம்முடைய நாட்டில் முன்னோடித் திட்டங் களாகக் கொண்டு வரப்பட்டு, இன்றளவும் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மக்கள் நல்வாழ்வுத்துறையில் பல முன்னேற்றங்கள்!**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் பாதையில்தான் நமது அரசின் நல்வாழ்வுத் திட்டங்களும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இதுநாள் வரையில் தொழில்துறை நிகழ்ச்சிகளில் தான் அதிகம் கலந்து கொண்டிருக்கிறேன். அதற்கு

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## மணிப்பூரில் கலவரம் நீடிப்பு!

### 3 பேர் உயிரோடு எரிப்பு!

*இம்பால், ஜூன் 8 -*

*மணிப்பூரில் பெரும்பான்மையாக உள்ள மைதேயி சமூகத்தினர் தங்களுக்கு பழங்குடியின அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரி வருகிறார்கள்.*

*இதற்கு நாகர் மற்றும் குகி சமூகத்தார் அடங்கிய சிறு பான்மை பழங்குடியின சமூகத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள் ளார்கள்.*

*இது தொடர்பாக மணிப்பூரின் பல்வேறு மாவட்டங் களில் மைதேயி மற்றும் பழங்குடிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. கடந்த மாதம் 3ந் தேதி முதல் கலவரம் ஏற்பட் டது. கலவரத்தில் 100க்கும் மேற்பட்டோர் பலியானார்கள். 310 பேர் காயம் அடைந்தனர்.*

*அங்கு மீண்டும் இயல்பு நிலை திரும்ப ராணுவம் மற்றும் துணை ராணுவ படை வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். மணிப்பூரில் அமைதியை ஏற்படுத்தும் வகையில் உள்துறை மந்திரி அமித் ஷா அங்கு சென்றார். ஓய்வுபெற்ற நீதிபதி தலை மையில் நீதி விசாரணை நடத்தப்படும் என்று அவர் அறிவித் தார்.*

*இதற்கிடையே குகி தீவிரவாதிகள் நேற்று முன்தினம் அதிகாலை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எல்லை பாதுகாப்பு படை வீரர் ரஞ்சித் யாதவ் கொல்லப்பட்டார். அசாம் ரைபிள்ஸ் துணை ராணுவப் படையின் 2 வீரர்கள் காயம் அடைந்தனர்.*

*குண்டு காயம் அடைந்த 8 வயது பழங்குடியின சிறுவன், அவரது தாயார் மற்றும் இன்னொரு உறவினர் ஆகிய 3 பேர் ஆம்புலன்சில் சென்று கொண்டு இருந்தனர். போலீஸ் பாதுகாப்புடன் தான் அந்த ஆம்புலன்ஸ் சென்றது. மேற்கு இம்பால் நோக்கி ஆம்புலன்ஸ் சென்றது.*

*மிகப்பெரிய கும்பல் ஆம்புலன்சை வழி மறித்து அவர் களை யார் என்று விசாரித்த அந்த கும்பல் ஆம்புலன்சோடு தீ வைத்தது. இதில் 3 பேரும் உடல் கருகி பரிதாபமாக இறந் தனர்.*

*மணிப்பூரில் தொடர்ந்து கலவரம் நடப்பதால் மேலும் 1000 வீரர்கள் அங்கு விரைந்துள்ளனர். எல்லை பாதுகாப்பு படையைச் சேர்ந்த 1000 வீரர்கள் விமானம் மூலம் அங்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர்.*

*மணிப்பூரில் இதுவரை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மத் திய ஆயுதம் தாங்கிய போலீசார் மற்றும் ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

### டெண்டர் முறைகேடு புகாரில்

## எஸ்.பி.வேலுமணி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்!

### சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

சென்னை, ஜூன் 8 –

கடந்த 2020ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின் போது அறப்போர் இயக்கம் சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தது.



சென்னை மாநக ராட்சி பகுதிகளில், கடந்த 2018 மற்றும் 2019–ம் ஆண்டுக ளில் சாலை மறு சீர மைப்பு, மழை நீர் வடிகால் கட்டமைப்பு களுக்கான 37 டெண் டர் ஒதுக்கீடு நடை பெற்றதாகவும், சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பில் 3 ஆயிரத்து 800 சாலை கள் மறு சீரமைப்பு மற்றும் 290 கோடி ரூபாய் மதிப்பிலான மழைநீர் வடிகால் பணிகளுக்கான டெண்டர்களில் பல் வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக அந்த மனுவில் தெரி விக்கப்பட்டிருந்தது.

ஒரே ஐ.பி. முகவ ரியிலிருந்து விண் ணப்பித்த குறிப் பிட்ட சிலருக்கு மட் டுமே இந்த டெண் டர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இந்த முறைகேடு களில் அப்போதைய உள்ளாட்சி துறை அமைச்சர் வேலுமணி மற்றும் அதிகாரிகள் ஈடுபட்டதாக வும், இது குறித்து உரிய விசாரணை நடத்த உத்தர விட வேண் டும் எனவும் அந்த மனுவில் குறிப்பிடப் பட்டிருந்தது.

இந்நிலையில், தலைமை நீதிபதி கங் காபூர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு அடங் கிய அமர்வு முன் இந்த மனு விசார ணைக்கு வந்தது.

அப்போது அரசு தலைமை வழக்கறி ஞர் ஆர்.சண்முகசுந் தரம், அரசு தலைமை குற்றவியல் வழக்கறி ஞர் அசன் முகமது ஜின்னா ஆகியோர் ஆஜராகி, இந்த வழக் கில் ஆரம்ப கட்ட விசாரணை நடத்தப் பட்டு விட்டதாகவும், இந்த வழக்கில் அடுத்த கட்ட நடவ டிக்கை குறித்து உயர் நீதிமன்ற ஒப்புதல் பெற வேண்டும் என ஏற்கனவே உத்தரவி டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அனைத் துத் தரப்பு வாதங் களையும் கேட்ட நீதி பதிகள், ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத் தரவு மாற்றி அமைக் கப்படுவதாகவும், இந்த வழக்கில் அடுத்த கட்ட நடவ டிக்கை எடுக்க எந்த தடையும் இல்லை என்றும் கூறி வழக்கை முடித்து வைத்தனர்.

## பிபோர்ஜாய் புயல் வடக்கு நோக்கி நகர்கிறது!

### கேரளா முதல் மராட்டியம் வரை கனமழைக்கு வாய்ப்பு!

*புதுடெல்லி, ஜூன் 8 -*

*இந்தியாவில் தென் மேற்கு பருவ மழை தாமத மான நிலையில் இப்போது அரபிக்கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது.*

*தென்கிழக்கு அரபி கட லில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை இப்போது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உரு வெடுத்து புயலாக மாறியுள் ளது. இந்த புயலுக்கு பிபோர்ஜாய் என்று பெயரி டப்பட்டுள்ளது. இந்த பெயரை வங்கதேச மாநி லம் வழங்கி உள்ளது. பிபோர்ஜாய் என்றால் பேராபத்து என்று பொருள்.*

*தற்போது அரபிக்கடலில் உருவாகி உள்ள பிபோர் ஜாய் புயலானது வடக்கு நோக்கி நகர வாய்ப்பு உள் ளது என்று கூறப்பட்டது. அதன்படி இந்த புயல் அடுத்த 6 மணி நேரத்தில் தீவிரமடைந்து வலுவான தாக உருமாறும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.*

*மேலும் இந்த புயல் கிழக்கு மத்திய மற்றும் அதையொட்டிய தென்கி ழக்கு அரபி கடலில் கோவா வுக்கு மேற்கு, தென் மேற்கே 920 கிலோ மீட்டர் தொலைவிலும், மும்பைக்கு தென்மேற்கே 1050 கிலோ மீட்டர் தொலைவிலும், போர்பந்த ரில் இருந்து தென்தென் மேற்கே 1130 கிலோ மீட் டர் தொலைவிலும் போர் பந்தருக்கு தெற்கில் 1430 கிலோ மீட்டர் தொலைவி லும் நிலை கொண்டுள்ள தாக கூறப்பட்டுள்ளது.*

*அடுத்த 24 மணி நேரத் தில் பிபோர்ஜாய் புயலா னது வடக்கு நோக்கி நகர்ந்து படிப்படியாக தீவி ரம் அடைந்து கிழக்கு மத் திய அரபி கடலில் தீவிர புயலாக மாற வாய்ப்பு உள் ளதாகவும் வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.*

*இந்த புயலால் கேரளா முதல் மராட்டியம் வரையி லான அரபி கடல் பகுதியில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது. அப்போது அரபி கடலில் மணிக்கு 120 முதல் 130 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும் எனவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.*

*இதன் காரணமாக அடுத்த 5 நாட்களுக்கு மீன வர்கள் யாரும் கடலுக்குச் செல்ல வேண்டாம் என எச் சரிக்கை விடப்பட்டுள்ளது.*